திராவிடத்தால் வாழ்கிறோம்

809

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



-வாழ்வோம்

மாநாடு

ர.பிரகாசு

59

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

மாமதுரையில் சீர்திருத்த அடைமழை!

தி.மு.கழக மாவட்ட மாநாடுகளின் வரிசையில் கடைசி மாநாட்டை நடத்திட, மதுரை மாவட்டக் கழகம் தயாராகிக் கொண்டிருந்தது. இதற்கடுத்து, இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருந்ததால், மதுரை மாவட்ட இரண்டாவது மாநாட்டைப் பேரெழுச்சியுடன் நடத்தத் திட்டமிட்டனர் கழகத்தினர். முன்கூட்டியே, வரவேற்புக் குழு, அலுவலகம் அமைக்கப்பட்டது. ஆனால், மாநாட்டின் செயலாளர்களில் ஒருவராக இருந்த அய்யாசாமி என்பவர், ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே மனத்தாங்கல் ஏற்பட்டு, தவறான அறிக்கைகளை வெளியிட்டார்.

சலசலப்புகளைச் சரிசெய்ய, மதுரைக்கு விரைந்தார் என்.வி.நடராசன். "மாநாட்டுக் காரியத்தில் எத்தகைய குறைபாடு இருப்பதாகத் தோன்றினாலும், வரவேற்புக் கமிட்டியிடமோ, தலைமைக் கழகத்திடமோ புகார் கூறியிருக்க வேண்டுமே தவிர, கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கக் கூடாது. இது கழகத்தை இழிவு படுத்தும் செயல்" என்று மாநாட்டுச் செயலாளர் பொறுப்பில் இருந்து அய்யாசாமி விடுவிக்கப்பட்டார். கடமை-கண்ணியம்-கட்டுப்பாட்டுக்கு எப்போதும் முக்கியத்துவம் தந்தவர் அண்ணா என்பது, இதிலும் நிரூபணமானது.

ஓவியம் : சிகரன்

அதன்பிறகு,1955-ஆம் ஆண்டு ஜனவரி 8, 9 ஆகிய தேதிகளில் மாநாடு நடைபெற்றது. முதல் நாள் 'பி.எஸ்.செல்வா குழுவினரின் இன்னிசை" நிகழ்ச்சியுடன் சீர்திருத்த மாநாடு தொடங்கியது. மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றிய, தில்லை வில்லாளன், புராண இதிகாசங்களைத் தோலுரித்தார். சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய அன்னை சத்தியவாணி முத்து, "புதுமைக் கருத்துகளையும், கொள்கைகளையும், ஏற்றுக்கொள்ள சமூகத்தைத் தயார் செய்வதே கழகம் செய்துவரும் சீர்திருத்தப் பணியின் நோக்கம்" என்றார். அருப்புக்கோட்டையைச் சேர்ந்த எம்.எஸ்.இராமசாமி 'மதத் தத்துவம்' என்ற தலைப்பில், மனித வளர்ச்சிக்கு மதங்கள் எத்தகையத் தடையாக உள்ளன என்பதை விளக்கினார்.

மாலையில் நாகூர் ஹனீபா, பி.எஸ். செல்வா குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன்பிறகு சி.பி.சிற்றரசு, சிவநேசம், அருண்மொழி, க.அறிவழகன், என்.வி.நடராசன், ஏ.கோவிந்தசாமி, அ.பொன்னம்பலனார், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, நாவலர் நெடுஞ்செழியன் எனப் பெரும் படைவரிசை சமூக சீர்திருத்தக் கருத்துக்களை அடைமழையாய் பொழிய, அதற்கு இடையூறாக உண்மையிலேயே மழை கொட்டியது. மழை நின்ற பின்னர், எஸ்.எஸ். இராஜேந்திரன் குழுவினரின் 'சந்திர மோகன்' நாடகம் நடைபெற்றது.

இரண்டாவது நாள் அரசியல் மாநாட்டுக்குத் தலைமை தாங்கவிருந்த கலைஞர், கண் பாதிப்பு காரணமாக கலந்துகொள்ளவில்லை. ஆனால், தலைமை உரையின் சாரத்தை எழுதி அனுப்பியிருந்தார். கலைஞருக்குப் பதிலாக, கோவை இராஜமாணிக்கம் மாநாட்டுக்குத் தலைமையேற்று, கலைஞரின் உரையை வாசித்துவிட்டு, தனது தலைமை உரையையும் நிகழ்த்தினார். பின்னர் கே.ஏ.மதியழகன், சுரதா, எஸ்.எஸ்.இராசேந்திரன் ஆகியோர் பேசினர்.

மீண்டும் மாலையில் புனுகு நடராஜன், நாகூர் ஹனீபா குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு மாநாடு தொடங்கியது. அதன்பிறகு, பல முக்கியத் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. அடுத்து ஈ.வெ.கி.சம்பத் சிறப்புரை நிகழ்த்தினார். கடைசியாக, பெரும் ஆரவாரத்துக்கு மத்தியில் பேருரை நிகழ்த்தினார் பேரறிஞர் அண்ணா. அந்தப் பேருரைக்குப் பிறகு, எம்.ஜி.ஆர். குழுவினரின் 'ஆசை நினைவு' நாடகத்துடன் மாநாடு கலைந்தது. வெறுமனே கலையவில்லை, இரண்டாவது மாநில மாநாட்டுக்கான எதிர்பார்ப்பை எகிறச் செய்து கலைந்தது!

...கூட்டம் திரளும்

அரசியலமைப்புச் சட்டத்தினைச் சூழ்ந்த கேடு - ஆளுநர்!

மாநில சட்டமன்றம் எடுக்கும் முடிவுகளுக்கு, ஒத்துழைத்து நடப்பவராக ஆளுநர் இருக்க வேண்டுமென தமிழ்நாடு அரசு தொடந்த வழக்கில், சமீபத்தில் உச்ச நீதிமன்றம் முக்கியமான தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பில் இருந்து, 'கேடு நீக்குவது எங்கள் கடமை' -உச்சநீதிமன்றத் தீர்ப்பின் நிறைவுரை எனச் சில குறிப்புகளை, இந்திரகுமார் தேரடி தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில் இருந்து,

"நல்ல ஒரு அரசமைப்புச் சட்டத்தை செயல்படுத்துவோர், நல்ல வழியில் நடப்பவர்களாகவே இருந்தால், அந்த அரசமைப்புச் சட்டம் இன்னும் சிறப்பானதாக செயல்படும். அதே வேளையில் ஒரு அரசமைப்புச் சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும்கூட அதனைச் செயல்படுத்துகின்றவர்கள் கேடானவர்களாக இருந்தால், அந்த அரசமைப்புச் சட்டம் மிகக் கேடு விளைவிக்கும்' - இது அண்ணல் அம்பேத்கர் அரசமைப்புச் சட்டம் குறித்துச் சொன்ன வரிகள்.

அப்படிப்பட்ட கேடுகளை நீக்கவும், அந்தக் கேடு நீக்கும் வழிமுறைகளை, மேலும் மேலும் வலிமைப்படுத்துவதும் இந்த உச்சநீதிமன்றத்தின் கடமையாகும். குடியரசுத் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் அவர்கள் இந்துச் சட்டம் மசோதாக்கள் மீது தனது தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் முடிவெடுக்க, இருந்த நேரத்தில், அப்போதைய இந்திய அரசு தலைமை வழக்கறிஞர் செதல்வாத் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பெயரால், குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நீங்கள், அந்த அரசமைப்புச் சட்ட விழுமியங்களுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும்.

நீங்கள் இந்த அரசமைப்புக்கு ஒரு குறியீட்டுத் தலைவர்தானே தவிர, உண்மையான ஆட்சி மன்றம் என்பது, நாடாளுமன்றம்தான். பிரதமர் மற்றும் அமைச்சரவையின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டவராகத்தான் நீங்களும் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். செதல்வாத் வலியுறுத்தலை, பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அந்த மசோதாக்களுக்குப் பின்னர், ஒப்புதலும் அளித்தார் என்பது வரலாறு. அரசமைப்புச் சட்டத்தின் அடிநாதத்தைப் பேணிக் காப்பதில் இந்த நாட்டின் முன்னோடிகள் காட்டிய அர்ப்பணிப்பு இது.

ஆளுநர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்'" என்கிற தீர்ப்பு இன்று இந்தியாவுக்கே வழிகாட்டியாக அமைந்துள்ளது.

பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

59

சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

தமிழ்நாடு தந்துள்ள வெளிச்சம்!

தமிழ்நாடு அரசு VS தமிழ்நாடு ஆளுநர் வழக்கில், இந்திய ஒன்றிய மாநிலங்களுக்கே ஒளியூட்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுள்ளது நம் தமிழ்நாடு அரசு. ஆளுநரின் அதிகாரங்கள் அனைத்தும் தனிச்சையான வையல்ல. அவை அனைத்தும் அமைச்சரவையின் முடிவுக்கும் சட்டமன்றத்திற்கும் கட்டுப்பட்ட வையே என்பதை இத்தீர்ப்பு நிலைநாட்டியுள்ளது.

இடஒதுக்கீடு தொடர்பாக, இந்திரா சஹானி வழக்கின் தீர்ப்பு எவ்வளவு முக்கியத்துவம் கொண்டதோ, அவசர நிலைப் பிரகடனம் குறித்த எஸ்.ஆர் பொம்மை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு எத்தனை முதன்மை வாய்ந்ததோ, அதற்கு நிகரான ஒரு தீர்ப்பு ஆளுநரின் அதிகார வரம்புகளைத் தீர்மானித்திருக்கும், இந்தத் தீர்ப்பு.

இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்ப்பின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ள, இந்திய அரசமைப்புச் சட்ட நிர்ணய அவையில் ஆளுநரின் அதிகாரங்கள் குறித்து, நடைபெற்ற விவாதங்களை மீள்வாசிப்பு செய்வதும், அந்த வரலாற்றைப்

புரட்டிப் பார்ப்பதும் அவசியமாகிறது. வழக்கறிஞர் சிகரம் ச.செந்தில்நாதன் எழுதி இருக்கும் 'குடியரசுத் தலைவர் ஆளுநர் அதிகாரங்கள்' என்ற நூல் அவ்வகையில் கவனம் பெறுகிறது. 2023-ஆம் ஆண்டு சந்தியா பதிப்பக வெளியீடாக இந்நூல் வெளியாகியிருக்கிறது.

மாநில ஆளுநர்கள் தங்களை முடியாட்சி மன்னர்கள் போல் எண்ணிக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அரசமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களாக அகங்காரம் பிடித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்கைக் கவனிப்பவர்களிடம் இயல்பாக எழும் கேள்வி, இவர்கள் இப்படி இருக்கலாமா? என்பதுதான், இதற்கான பதிலைத் தேட முயலும் நூல் இது.

1935-இந்திய அரசுச் சட்டம் குறித்த அறிமுகத்தில் தொடங்கும் இந்நூல், அரசமைப்பு நிர்ணய சபை குறித்த வரலாற்றுப் பார்வையை வழங்கி, குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரின் அதிகாரங்கள் குறித்து, அரசியல் சட்ட நிர்ணய சபையில் நடைபெற்ற விவாதங்களின் மீது வெளிச்சம் பாய்ச்சுகிறது.

தற்போதுள்ள அரசமைப்புச் சட்டக் கூறுகளை, வரைவுச் சட்டத்தின் கூறுகளுடன் ஒப்பிட்டு நிர்ணய சபையில் நடந்த விவாதங்கள் மற்றும் அதில் பங்கேற்ற உறுப்பினர்களின் வாத-பிரதிவாதங்களின் மீதும் இந்நூல் கவனம் குவிக்கிறது.

குறிப்பாக, ஆளுநர் என்பவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டுமா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமா, மாநில சட்டமன்றத்தால் முன்மொழியப்பட்டு நியமனம் செய்யப்பட வேண்டுமா என்ற கேள்விதான் உறுப்பினர்களிடையே இருந்துள்ளதே தவிர, ஆளுநர் என்ற 'காலனிய எச்சம்' அவசியமே இல்லை என்ற விவாதம் நிர்ணய சபை உறுப்பினர்களிடையே நடைபெறவில்லை.

ஆனால், காலம் இப்பதவியின் பாதகங்களை, அவசியமின்மையை நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

ஆளுநர் என்ற ஒரு பதவியே தேவையில்லை என்று முழங்கிய ஒரே இயக்கமான திராவிட இயக்கம் அரசியல் நிர்ணய சபையில் இடம்பெறாமல் போனது, இப்போதாமைக்கு முக்கியக் காரணமாக இருந்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை எல்லாம் ஆளுநர்கள் மீறிக்கொண்டு, மக்களுக்கும் மாநில அரசுக்கும் முட்டுக்கட்டையாக விளங்கிக் கொண்டிருக்கும் காலத்தில், நம்பிக்கையூட்டும் தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது. அப்படியான வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நூல் இது.

...வாசிப்போம்.

ப்ளாஷ்பேக்

இளைஞர் அணிப் பாசறைக் கூட்டம்!

ஜ.கண்மணி ஜவஹர்

1997-ஆம் ஆண்டு, சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி சார்பில், அமராவதிப்புதூரில் மூன்று நாட்கள் நடந்த பாசறைக் கூட்டத்தில், சிவகங்கை நகர இளைஞர் அணி சார்பில் பங்கேற்றேன். அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் என்னைப் பாராட்டி வாழ்த்தியபோது, எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. அருகில், அன்றைய மாவட்டச் செயலாளர் அண்ணன் மறைந்த தா.கிருட்டிணன் அவர்களும் மற்றும் சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மறைந்த அண்ணன் ரூசோ அவர்களும் உள்ளனர்.

- ஜ.கண்மணி ஜவஹர்,
1-வது வட்ட தி.மு.க. செயலாளர், சிவகங்கை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

நூல்வழி

ஆங்கிலம் அவசியம்!

1957-ஆம் ஆண்டு, 'இந்திய ஆசிரியர் மாநாடு' ஒன்றுக்கு அன்றைய பிரதமர் நேரு வாழ்த்து அனுப்பினார். 'இந்தியாவில் ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆங்கிலம் உலகில் பெரும்பாலும் உபயோகத்தில் உள்ள மொழியாகும். ஆகவே, அந்த மொழி அறிவு அவசியம், அதுவும் உயர்தரமாக இருக்க வேண்டும்' என்றும் அந்த வாழ்த்தில் குறிப்பிட்டு இருந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131